TN ESLC Question Paper 2022 Social Science

No. of Printed Pages : **11**

6207

பதிவு எண்
Register Number

சமூக அறிவியல் / SOCIAL SCIENCE

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : **2.00** மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : **100**
Time Allowed : **2.00** Hours] [Maximum Marks : **100**

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

பகுதி - I / PART - I

பிரிவு - 1 / SECTION - 1

கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். **10x1=10**

Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

1. இந்தியாவில் போர்ச்சுக்கீசிய ஆதிக்கத்திற்கு அடித்தளம் அமைத்தவர் யார் ?

(அ) வாஸ்கோடகாமா (ஆ) பார்த்தலோமியோ டயஸ்

(இ) அல்போன்சோ-டி-அல்புகர்க் (ஈ) அல்மெய்டா

Who laid the foundation of Portuguese power in India ?

(a) Vasco da Gama (b) Bartholomew Diaz

(c) Alfonso de Albuquerque (d) Almeida

2. ''வேதம்'' என்ற சொல் _____ லிருந்து வந்தது.

(அ) சமஸ்கிருதம் (ஆ) இலத்தீன் (இ) பிராகிருதம் (ஈ) பாலி

The word 'Veda' is derived from _____.

(a) Sanskrit (b) Latin (c) Prakrit (d) Pali

3. பழங்கால நகரங்கள் எனப்படுவது :

(அ) ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ

(ஆ) டெல்லி மற்றும் ஹைதராபாத்

(இ) பம்பாய் மற்றும் கல்கத்தா

(ஈ) பாட்னா மற்றும் நாக்பூர்

Ancient towns are _____.

(a) Harappa and Mohenjodaro

(b) Delhi and Hyderabad

(c) Bombay and Calcutta

(d) Patna and Nagpur

4. பருத்தி வளர ஏற்ற மண் :

(அ) செம் மண் (ஆ) கரிசல் மண் (இ) வண்டல் மண் (ஈ) மலை மண்

Ideal soil for growing cotton is _____.

(a) Red Soil (b) Black Soil (c) Alluvial Soil (d) Mountain Soil

5. புவியில் உள்ள நன்னீரின் சதவீதம் :

(அ) 71 (ஆ) 97 (இ) 2.8 (ஈ) 0.6

The percentage of fresh water on the earth is _____.

(a) 71 (b) 97 (c) 2.8 (d) 0.6

6. புவிப்பட தயாரிப்பு முறை குறித்து கையாளும் பாடப்பிரிவு _____.

(அ) மக்களியல் (ஆ) புவிப்படவியல்

(இ) இயற்கையமைப்பு (ஈ) இடவியல்

The subject which deals with map making process is _____.

(a) Demography (b) Cartography

(c) Physiography (d) Topography

7. மாநில அமைச்சரவைக் குழுவின் தலைவர் :

(அ) ஆளுநர் (ஆ) முதலமைச்சர்

(இ) சபாநாயகர் (ஈ) உள்துறை அமைச்சர்

The State Council of Ministers is headed by _____.

(a) The Governor (b) Chief Minister

(c) Speaker (d) Home Minister

8. சாலை விபத்துகளுக்கான காரணங்கள் யாவை ?

(அ) அதிவேகம் (ஆ) குடிபோதையில் ஓட்டுதல்

(இ) சிவப்பு விளக்கில் நில்லாமை (ஈ) இவை அனைத்தும்

What are the causes for the road accidents ?

(a) Over Speed (b) Drunken Drive

(c) Red light Jumping (d) All of these

9. இந்திய ரூபாய் குறியீடு ₹-ஐ வடிவமைத்தவர் யார் ?

(அ) உதய குமார் (ஆ) அமர்த்தியா சென்

(இ) அபிஜித் பானர்ஜி (ஈ) ஆடம் ஸ்மித்

Who designed the symbol ₹ of Indian rupee ?

(a) Udayakumar (b) Amartya Sen

(c) Abijith Banerjee (d) Adam Smith

10. பொதுத்துறை _____ உடையது.

(அ) இலாப நோக்கம் (ஆ) சேவை நோக்கம்

(இ) ஊக வணிக நோக்கம் (ஈ) பொழுதுபோக்கு நோக்கம்

Public Sector is on _____.

(a) Profit Motive (b) Service Motive

(c) Speculative Motive (d) Entertaining Motive

பிரிவு - 2 / SECTION - 2

கோடிட்ட இடங்களை நிரப்புக. **10x1=10**
Fill in the blanks :

11. இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்துவதற்காக வாரிசு இழப்புக் கொள்கையை கொண்டு வந்தவர் _____.
_____ adopted the policy of Doctrine of Lapse to extend the British Empire in India.

12. _____ தமிழர்களால் ''வீர மங்கை'' எனவும் ''தென்னிந்தியாவின் ஜான்சி ராணி''எனவும் அறியப்பட்டார்.
_____ was known by Tamils as "Veera mangai" and "Jhansi Rani of South India."

13. _____ இந்திய மக்களின் வாழ்க்கையில் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தது.
_____ was the integral part in the life of the people of India.

14. 'புவியின் தோல்' என்று _____ அழைக்கப்படுகிறது.
The "Skin of the earth" is _____.

15. இந்தியாவின் _____ மாநகரம் உலகிலேயே இரண்டாவது அதிக நகர மக்கள் தொகையைக் கொண்டது.
_____ Metropolitan City in India has the second highest urban population in the World.

16. புவிக்கோள மாதிரி என்பது _____ ன் உண்மையான உருவ மாதிரி ஆகும்.
The globe is the true representation of the _____.

17. இந்திய அரசியலமைப்புச் சட்டம் _____ குடியுரிமையை மட்டும் வழங்குகிறது.
Our Indian Constitution provides for only _____ Citizenship.

18. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையினை வடிவமைத்த முதன்மைச் சிற்பி _____.
The Chief architect of India's foreign policy was _____.

19. நிகழ் நிலை வங்கியை _____ என்றும் அழைக்கலாம்.
Online Banking is also known as _____.

20. தனியார் துறை _____ நோக்கத்தில் செயல்படுகிறது.
The private sector is on _____ motive.

பிரிவு - 3 / SECTION - 3

பொருத்துக : **10x1=10**

Match the following :

21.	ஆங்கிலேயர்கள்	-	புவி படத்தின் திறவுகோல்
	The British	-	Key of a map
22.	நிரந்தர நிலவரி திட்டம்	-	நீண்ட நாளைய மாற்றம்
	Permanent Settlement	-	Long Term Changes
23.	மதுரை	-	அன்னி பெசன்ட்
	Madurai	-	Annie Besant
24.	பிரம்ம ஞான சபை	-	மொத்த உள்நாட்டு உற்பத்தி
	Theosophical Society	-	Gross Domestic Product
25.	காலநிலை	-	பண்டைய நகரம்
	Climate	-	Ancient Town
26.	அபாயகரமான கழிவுகள்	-	டிசம்பர் 31, 1600
	Hazardous Waste	-	31st December 1600
27.	புவியியல் காரணிகள்	-	புது டெல்லி
	Geographical Factors	-	New Delhi
28.	புவிப்பட விளக்கம்	-	மூலப்பொருட்கள்
	Legend	-	Raw Materials
29.	தேசிய போர் நினைவுச் சின்னம்	-	வங்காளம்
	National War Memorial	-	Bengal
30.	GDP	-	காலாவதியான மருந்துகள்
	GDP	-	Outdated drugs

பகுதி - II / PART - II

பிரிவு - 1 / SECTION - 1

வரலாறு / HISTORY

எவையேனும் நான்கு வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்கவும். **4x2=8**
Answer **any four** questions only.

31. ஆவணக் காப்பகங்கள் பற்றி சிறு குறிப்பு வரைக.
Give a short note on Archives.

32. பாளையக்காரர்கள் என்பவர் யார் ? எவையேனும் இரண்டு பெயர்களை கூறுக.
What do you know about the Palayakkarars ? Name any two of them.

33. SSA மற்றும் RMSA -ன் விரிவாக்கம் தருக.
Expand SSA and RMSA.

34. இந்தியாவின் பாரம்பரிய கைவினைப் பொருட்களின் தொழிற்சாலைகள் யாவை ?
What are the traditional handicraft industries of India ?

35. மாகாண நகரங்கள் மூன்றின் பெயர்களைக் குறிப்பிடுக.
Name the three Presidency cities.

36. சமூக தீமைகளில் சிலவற்றைப் பட்டியலிடுக.
List out some social evils.

பிரிவு - 2 / SECTION - 2

புவியியல் / GEOGRAPHY

எவையேனும் நான்கு வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்கவும். **4x2=8**
Answer **any four** questions only.

37. மண்ணின் வகைகளைக் கூறுக.
State the types of soils.

38. காலநிலை – வரையறுக்கவும்.
Define 'Weather'.

39. கிராமப்புறத்திலிருந்து நகர்ப்புறத்திற்கு இடம் பெயர்வதற்கான முக்கிய காரணங்கள் யாவை ?

What are the causes of rural to urban migration ?

40. நமது நாட்டில் வெள்ள பாதிப்புக்குள்ளாகும் முக்கிய பகுதிகளைப் பட்டியலிடுக.

List out the major flood prone areas of our country.

41. பொருளாதார நடவடிக்கை என்றால் என்ன ?

What is meant by economic activity ?

42. ஆப்பிரிக்கா 'தாய் கண்டம்' என அழைக்கப்படுவது ஏன் ?

Why Africa is called a "Mother Continent" ?

பிரிவு - 3 / SECTION - 3

குடிமையியல் மற்றும் பொருளாதாரம் / CIVICS AND ECONOMICS

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்கவும். **2x2=4**

Answer **any two** questions only.

43. குடியுரிமையின் வகைகளைக் குறிப்பிடுக.

Name the types of Citizens.

44. ஏதேனும் நான்கு சாலை விதிகளை எழுதுக.

Write any four Traffic rules.

45. பணத்தின் மதிப்பு என்றால் என்ன ?

What is the Value of Money ?

46. பொதுத் துறைகள் குறித்து சிறு குறிப்பு எழுதுக.

Write a short note on Public Sector.

பகுதி - III / PART - III

கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **6x5=30**

Answer the following questions.

47. (அ) நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்களைப் பற்றிக் குறிப்பிடுக.

அல்லது

(ஆ) சோழர் காலத்தில் கல்வியின் நிலையைப் பற்றி விரிவாக எழுதுக.

(a) Give an account of the historical sources of Modern India.

OR

(b) Give a detailed account on education under Cholas.

48. (அ) நிலையான நிலவரி திட்டத்தின் நிறை குறைகளை விவாதிக்கவும்.

அல்லது

(ஆ) 1991 -ஆம் ஆண்டு சீர்திருத்தங்களுக்குப் பிறகு தொழில்துறையின் வளர்ச்சியை விளக்குக.

(a) Discuss the merits and demerits of the Permanent Settlement.

OR

(b) Explain different phases of Industrial development in India in 1991.

49. (அ) நகரமயமாக்கலினால் ஏற்படும் விளைவுகளை ஆராய்க.

அல்லது

(ஆ) மூலப்பொருட்களின் அடிப்படையில் தொழிலகங்களை வகைப்படுத்தி விளக்குக.

(a) Discuss the consequences of Urbanisation.

OR

(b) Classify and explain the industries based on the source of raw materials.

50. (அ) காற்று மாசுபடுதலைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

அல்லது

(ஆ) காணிப் புவிப்படங்கள் மற்றும் அவற்றின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.

(a) Write an essay on Air Pollution.

OR

(b) Describe the Cadastral Map and its importance.

51. (அ) முதலமைச்சரின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரிக்கவும்.

அல்லது

(ஆ) நீதித்துறையின் பங்கு பற்றி எழுதுக.

(a) Discuss the powers and functions of the Chief Minister.

OR

(b) Write about the role of Judiciary.

52. (அ) பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை ?

அல்லது

(ஆ) பொதுத் துறையின் உறுப்புகள் பற்றி விளக்குக.

(a) What are the effects of black money on economy ?

OR

(b) Explain the organs of Public Sector.

பகுதி - IV / PART - IV

53. கீழ்க்கண்டவைகளுக்கு காலக்கோடு வரைக. **5x1=5**

(அ) வாஸ்கோடகாமா கள்ளிக்கோட்டையை அடைந்த ஆண்டு

(ஆ) சதி ஒழிப்புச் சட்டம்

(இ) இந்தியாவில் இருப்புப்பாதை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு

(ஈ) உட்ஸ் கல்வி அறிக்கை

(உ) வேலூர் கலகம்

Draw a timeline on the following :

(a) Vasco da Gama reached Calicut.

(b) Sati Abolition Act.

(c) The network of railroads in India was introduced.

(d) Wood's Despatch

(e) Vellore Revolt

பகுதி - V / PART - V

பிரிவு - 1 / SECTION - 1

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5x1=5**

Answer **all** the questions.

54. இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும்.

(அ) கள்ளிக்கோட்டை

(ஆ) டெல்லி

(இ) கல்கத்தா

(ஈ) லக்னோ

(உ) தஞ்சாவூர்

Mark the following places on the outline map of India.

(a) Calicut

(b) Delhi

(c) Calcutta

(d) Lucknow

(e) Tanjore

பிரிவு - 2 / SECTION - 2

55. உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும். **10x1=10**

(அ) இந்தியப் பெருங்கடல்

(ஆ) தென் ஆப்பிரிக்கா

(இ) பிரேசில்

(ஈ) ஆஸ்திரேலியா

(உ) அட்லாண்டிக் பெருங்கடல்

(ஊ) இந்தியா

(எ) இங்கிலாந்து

(ஏ) சீனா

(ஐ) இரஷ்யா

(ஒ) பசிபிக் பெருங்கடல்

Mark the following places on the World Map.

(a) Indian Ocean

(b) South Africa

(c) Brazil

(d) Australia

(e) Atlantic Ocean

(f) India

(g) England

(h) China

(i) Russia

(j) Pacific Ocean

- o 0 o -